# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | : | **சத்தியராஜ்** |
| Father’s / Husband Name | : | **நாகேஷ்வரன்** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 27/2025 |

**தேதி : 16.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது குழந்தைகள் நல மையத்தில் Supervisor ஆக வேலை செய்துவருகிறேன். சம்பவ காலத்தில் நான் Team member ஆக வேலை செய்துவந்தேன். கடந்த 05.06.2020 அன்று 1098 என்ற எண்ணிலிருந்து சத்திரமனை ஆட்டுபட்டியில் இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது. கிடைத்த தகவலின்பேரில் மறுநாள் நானும், பட்டு என்ற Team Member ம் சத்திரமனைக்கு சென்றோம். நாங்கள் சென்று பார்க்கும்போது பட்டிலிருந்து ஆடுகளை மேய்ப்பதற்காக கொண்டுசென்றுவிட்டார்கள். அருகில் இருந்தவர்களை விசாரித்தபோது அந்த சிறுவர்கள் தெற்கு பக்கமாக ஆடு மேய்க்க சென்றுவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் அந்த வழியாக சென்று பார்த்தபோது சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வேறு எங்கேயும் ஆடு மேய்க்க போகிறார்களா என்று கண்காணித்தோம். மாலை நேரமாகிவிட்டதால் நாங்கள் அலுவலகத்திற்கு

திரும்ப வந்துவிட்டோம். மறுநாள் 07.06.2020 அன்று காலை 9.00மணிக்கு நானும், பட்டுவும் கிளம்பி அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அவர்கள் அங்கு இல்லை. பக்கத்தில் உள்ள ஏரியில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்களை என்னுடைய செல்போனில் நான் படம் எடுத்தேன். அந்த சிறுவர்களை எங்களால் நெருங்க முடியவில்லை. நாங்கள் அலுவலகத்திற்கு திரும்ப வந்து Labour Officer யிடம் தகவல் சொன்னோம். மறுநாள் 08.06.2020 அன்று மாலை 3.30மணி அளவில் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வி.ஏ.ஓ., குழந்தைகள் நல ஒருங்கிணைப்பாளர், குழந்தைகள் நல பாதுகாப்பு இயக்குநர், Labour Inspector Santhi ஆகியோர்களுடன் நானும், பட்டுவும், Labour Commissioner பாஸ்கர் ஆகியோர்கள் சத்திரமனையிலுள்ள மலையடிவாரத்தில் சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கு சென்று சிறுவர்களை மீட்டு Child Welfare Committee ல் ஒப்படைத்தோம்.

சிறுவர்களை விசாரித்தபோது ஒருவன் பெயர் முருகன், வயது 13, இராமநாதபுரம் என்று சொன்னார். தன்னை கண்ணன் என்பவர் தன்னுடைய பெற்றோரிடம் ரூ. 60,000/- கொடுத்து தன்னை ஆடு மேய்க்க அழைத்துவந்ததாக சொன்னார். மற்றொரு சிறுவனின் பெயர் மதி, திருச்சி மாவட்டம் என்று சொன்னார். ஆஜர் எதிரி கண்ணனை சிறுவர்களை மீட்ட இடத்தில் வைத்து பார்த்தேன். Child Line Committee யிலிருந்து நடவடிக்கை எடுத்தார்கள். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

## <u>குறுக்கு விசாரணை</u>

05.06.2020 அன்று Child Help Line எண்ணிற்கு தகவல் வந்தது. நான் என்னுடைய செல்போனில் சுமார் 10 போட்டோக்களை எடுத்தேன். போட்டோவை வாட்ஸ்அப் மூலமாக ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பினேன்.

நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். மற்றவர்கள் 6, 7 வாகனங்களில் வந்தார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.